**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 600 018.**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., ஆணையர், தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. | 1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர், 2. இதர செயற்பதிவாளர்கள் / மாநிலத் தேர்தல் அலுவலர்கள் |

**ந.க.1157/2022/கூதே.5** **நாள் : 03.11.2022**

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், விதி எண். 52(3)(a)-ன் கீழ் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளை தேர்தல் அலுவலர்களாக (Election Officers) நியமனம் செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

-----

கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த மாவட்டத் தேர்தல் அலுவலர்களால் 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் (இனிவரும் இடங்களில் விதி எனப்படும்), விதி எண். 52(3)(a)-ன் கீழ் தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

விதி எண். 52(3)(a) கூறுவதாவது :

> *"தேர்தல் ஆணையம் ஒரு மாவட்டத்திற்கு அல்லது ஒரு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு, மாவட்ட தேர்தல் அதிகாரியாக பணியமர்த்தம் செய்யப்பட்டவர், அந்த மாவட்டத்தின் அல்லது அந்த மாவட்டத்தின் ஒரு பகுதி கூட்டுறவு சங்கங்களின், நிர்வாக சபை உறுப்பினர் தேர்தல் நடத்துவதற்காக, அரசு அதிகாரிகள் அல்லது அவரின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள் அல்லது கூட்டுறவு சங்கங்களின் அல்லது ஊராட்சி மன்றங்கள் அல்லது மத்திய அல்லது மாநில அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் அல்லது கல்வி நிறுவனங்களின் பணியாளர்களை மற்றும் அதிகாரிகளை, தேவைப்படும் அத்தகைய அளவிலான தேர்தல் அதிகாரிகளை பணியமர்த்தம்*

*செய்யலாம். மாவட்டத் தேர்தல் அதிகாரி, மாற்று தேர்தல் அதிகாரி அல்லது அதிகாரிகளை கூட பணியமர்த்தம் செய்யலாம்."*

இவ்விதியில், 'கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களை மற்றும் அதிகாரிகளை, தேவைப்படும் அத்தகைய அளவிலான தேர்தல் அதிகாரிகளாக பணியமர்த்தம் செய்யலாம்' என்று கூறப்பட்டுள்ளது. ஆயின் அவ்வாறு பணியமர்த்தம் செய்யப்படுபவர்கள் 'இப்பதவித் தரத்திற்கு குறையாத' என்று எப்பதவித் தரத்தையும் (Post) குறிப்பிடவில்லை. எனவே, சில மாவட்ட தேர்தல் அலுவலர்கள், பணியாளர்களின் பதவித் தரத்தினை (Post) கருத்தில் கொள்ளாது, சங்கத்தில் பணியாற்றி வருபவர் (Employee) என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில், தொகுப்பூதியம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களையும் மற்றும் பணிநிலை எதுவாக இருந்தாலும் அவர்களையும் சங்க தேர்தல் அலுவலர்களாக பணியமர்த்தம் செய்கிறார்கள்.

தவிரவும் ஒரு சங்கத்தின் பணியாளர்கள் அதே சங்கத்தின் தேர்தல் அலுவலர்களாகவும், சில இனங்களில் ஒரு சங்கத்தின் பணியாளர்கள் அவர்கள் முன்பு பணியாற்றிய சங்கங்களின் தேர்தல் அலுவலர்களாகவும் நியமனம் செய்யப்பட்டு அச்சங்கங்களின் தலைவர் / துணைத்தலைவர் உட்பட அனைத்து தேர்தல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

சங்கப் பணியாளர்களை தேர்தல் அலுவலர்களாக நியமித்திடும் இவ்வகை விவாதத்திற்குரிய, ஒழுங்குப்படுத்தப்படாத போக்கினால் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் ஆணையம் நடத்துவதில் நடைமுறை சிக்கல்களும், தேர்தல் அலுவலரின் நடவடிக்கை தொடர்பான புகார்களும், வழக்குகளும் ஆணையம் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றன.

தேர்தல் அலுவலர்களாக பணியமர்த்தம் செய்யப்படுபவர்கள் நீதிமுறைசார்புடைய (Quasi Judicial) அலுவலராகச் செயல்படுவதால் இவர்களது நியமனத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமானது என்று ஆணையம் கருதுகிறது.

மேலே சொல்லப்பட்ட சிரமங்களை (Difficulties) கருத்திற்கொண்டு விதி எண். 52-(3)(a)-ன் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களை மற்றும் அதிகாரிகளை (Employees and Paid Officers) தேர்தல் அலுவலர்களாக மாவட்டத் தேர்தல் அலுவலர் நியமனம் செய்வது தொடர்பாக விதி எண்.52-A (9) மற்றும் (10) – ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை கைக்கொண்டு கீழ்வரும் அறிவுரைகளை ஆணையம் வழங்குகிறது :

1. போதுமான அளவு அரசு அலுவலர்கள் (Officers of the Government or Officers Subordinate to the District Election Officer) இல்லாத நிலையில் மட்டுமே சங்கப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளை தேர்தல் அலுவலர்களாக பணியமர்த்தலாம்.

3

2. மாவட்டத் தேர்தல் அலுவலரால், தேர்தல் அலுவலராக பணியமர்த்தம் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் (Employees and Officers):-

(i) செயலாளர்கள் (Secretaries), உதவி செயலாளர்கள், நிர்வாக அலுவலர்கள் (Executive officers), உதவி நிர்வாக அலுவலர்கள், மேலாளர்கள் (Managers), உதவி மேலாளர்கள் ஆகிய வகை (Category of posts) பதவிகளில் உள்ளவர்கள் மற்றும் அவ்வகைப் பதவிகளுக்கு குறையாதவகை (Not below such category of posts) பதவிகளில் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) காலமுறை ஊதியம் உள்ள பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும் (A post carrying a definite scale of pay).

(iii) சங்கத்தின் ஒப்பந்த மற்றும் தொகுப்பூதிய பணியாளராக இருத்தல் கூடாது.

(iv) ஒரு சங்கத்திற்கு தேர்தல் அலுவலராக பணியமர்த்தம் செய்யப்படுபவர் அச்சங்கத்தின் தற்போதைய அல்லது முன்னாள் (is or was) பணியாளராக இருத்தல் கூடாது.

(v) பெருந்தண்டனைக்குரிய குற்றங்கள் பற்றிய (Major Penalties) ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை நிலுவையில் உள்ளவராக (Under disciplinary Proceedings and pending disposal) இருத்தல் கூடாது.

மேற்காண் அறிவுரைகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்வரும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும், அது பற்றிய விவரத்தை 15.11.2022-க்குள் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்பிடவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

3/11/22

ஆணையருக்காக

3.11.2022

நகல் :

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.

4. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.

5. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.

6. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.

7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.

8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.

9. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.

10. அலுவலக இருப்புக் கோப்பு 2022.

11. கூ.தே.3 பிரிவு.